**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

முன்னிலை: **திரு. A.K. பாபுலால், B.Com.,L.L.M.,**
சார்பு நீதிபதி,

2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2049 தமிழ் விளம்பி ஆண்டு ஐப்பசி திங்கள் 7ம் நாள் புதன்கிழமை

**அ.வ.எண்.87/2017**

1. G. ராமலட்சுமி
2. G. குருசாமி
3. G. மகேஷ்வரி
4. G. மாரியம்மாள் … வாதிகள் …

/எதிர் /

1. G. வரதராஜபெருமாள்
2. G. சங்கரப்பன்
3. P. சுப்பாலட்சுமி
4. R. சௌந்திரகலா
5. R. சுந்தரி
6. R. குருசிங்
7. P. முத்து … பிரதிவாதிகள் …

இவ்வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.P.பாப்புராஜ், B.A.,B.L., திரு.P.சிவகுமார், B.A.,B.L., ஆகியோர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. கணேஷ் சுப்பிரமணியன், B.Sc.,L.L.B., அவர்கள் ஆஜராகியும், 4,6ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G. சரவணகுமார், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 2,3,5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜராகாத நிலையிலும், 2,3,5 பிரதிவாதிகள் ஒருதரப்பாக்கப்பட்டும், 7ம் பிரதிவாதி தரப்பில் திரு.சுந்தரபாண்டியன், M.L., அவர்கள் ஆஜராகியும், பின்னர் 7ம் பிரதிவாதி ஒருதரப்பாக்கப்பட்டும் மற்றும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

*வாதிகள், உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 7 விதி 1ன் கீழ், இதன் 1வது தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 3/28 பங்கையும், 2வது தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 3/7 பங்கையும் நயமிதம் பார்த்து தனித்து பிரித்து வாதிகளின் தனித்த சுவாதீனத்திற்கு ஒப்படைக்க ஏதுவாக ஒரு முதல்நிலைத் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

**2) பிராதின் சுருக்கம் :-**

*இதன் 1,2 தபசில் சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்திலும் ஆளுகையிலும் இருந்து வருகிறது.*

*இதன் 1வது தபசில் சொத்துக்கள் ஆதியில் குருசாமி நாயக்கர் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். அதாவது இதன் 1 முதல் 3,5,9,14 அயிட்டச் சொத்துக்கள் குருசாமி நாயக்கரின் தகப்பனார் சங்கரப்ப நாயக்கருக்கு பூர்வீகமாகவும், 4, 6 முதல் 8, 10 முதல் 13 அயிட்டச் சொத்துக்கள் சங்கரப்ப நாயக்கருக்கு கிரையம் மூலமும் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். இதன் 2வது தபசில் சொத்துக்கள் மேற்படி குருசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சுயார்ஜித சொத்துக்களாகும். இதன் 1,2 தபசில் சொத்துக்களை மேற்படி குருசாமி நாயக்கர் அனுபவம் செய்து வந்து, கடந்த 21.07.2000ல் இறந்துவிட்டார். மேற்படியாரின் மனைவி சுந்தரம்மாள் குருசாமி நாயக்கருக்கு 1ம் பிரதிவாதி வரதராஜபெருமாள், 2ம் பிரதவாதி சங்கரப்பன், 4ம் பிரதிவாதியின் கணவரும் 5,6 பிரதிவாதிகளின் தகப்பனாருமான ராமசுப்பு என்ற மூன்று ஆண் மக்களும், 1,4 வாதிகள் மற்றும் 2ம் வாதியின் மனைவியும், 3ம் வாதியின் தாயாருமான சீனியம்மாள் 3ம் பிரதிவாதி சுப்பாலட்சுமி ஆகிய நான்கு பெண் மக்களும் வாரிசுகள். மேற்படி குருசாமி நாயக்கர் இறப்பிற்கு பின்பு, இதன் 1,2 தபசில் சொத்துக்களை மேற்படியாரின் ஆண், பெண் வாரிசுகள் கூட்டாக அடைந்து அனுபவம் செய்து வந்தார்கள்.*

*அவ்வாறு அனுபவம் செய்து வருகயைில், 2ம் வாதியின் மனைவியும், 3ம் வாதியின் தாயாருமான சீனியம்மாள் கடந்த 29.08.2013ல் இறந்துவிட்டார். மேற்படியாருக்கு பின்பு 4ம் பிரதிவாதியின் கணவரும், 5,6 பிரதிவாதிகளின்*

தகப்பனாருமான ராமசுப்பு கடந்த 24.10.2014ல் இறந்துவிட்டார். மேற்படியாருக்கு இவ்வழக்கில் உள்ள 3 முதல் 5 பிரதிவாதிகள் வாரிசுகள். வேறு வாரிசுகள் கிடையாது. மேற்படியார்கள் இறப்பிற்கு பின்பு இதன் 1,2 தபசில் சொத்துக்களை வாதிகளும், 1 முதல் 6 பிரதிவாதிகளும் கூட்டாக அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள்.

வாதிகள் வெளியூரில் இருப்பதால், வாதிகளுக்காவும், 3ம் பிரதிவாதிகளுக்காவும், இதன் 1,2 தபசில் சொத்துக்களை 1,2 பிரதிவாதிகளும், 3ம் பிரதிவாதியின் கணவருமான ராமசுப்புவும் அனுபவம் செய்து வந்து, இதன் 1,2 தபசில் சொத்தின் வருமானத்தில் வாதிகளுக்குரிய பங்கை அவ்வப்போது கொடுத்து வந்தார்கள். அவ்வாறு இதன் 1,2 தபசில் சொத்துக்கள் வாதிகளும், 1 முதல் 6 பிரதிவாதிகளும் அனுபவம் செய்து வருகையில் வாதிகளுக்கு இதன் தபசில் சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்ய லாயக்கில்லை என்பதால், வாதிகள் பெரிய மனிதர்கள் மூலம் இதன் 1,2 தபசில் சொத்துக்களில் வாதிகளுக்குரிய பங்கை 15.06.2017ல் கேட்டதில், 1 முதல் 6 பிரதிவாதிகள் நாட்கடத்தி வந்தார்கள். பின்பு வாதிகள் மீண்டும் 1 முதல் 6 பிரதிவாதிகளிடம் 30.06.2017 தேதியில் பாகம் கேட்டதில், மேற்படியார்கள் சரியான முகாந்திரம் எதுவும் கூறவில்லை.

இதன் 1வது தபசில் சொத்து பூர்வீக சொத்து என்பதால், சட்டப்படி இதன் 1,2 தபசில் சொத்துக்களில் 1,4 வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதிக்கு தலா 1/28 பங்கும், குருசாமி நாயக்கரின் இறந்துபோன மகள் சீனியம்மாளுக்கு 1/28 பங்கும் உண்டு. மேற்படி சீனியம்மாள் இறந்துவிட்டதால், மேற்படியாரின் வாரிசுகளான 2,3 வாதிகளுக்கு மேற்படி 1/28 பங்கு கிடைக்கக்கூடியது. 1,2 பிரதிவாதிகளுக்கு தலா 8/28 பங்கும், 1,2 பிரதிவாதிகளின் சகோதரரான ராமசுப்பு இறந்து விட்டதால், அவருடைய 8/28 பங்கு மேற்படியாரின் வாரிசுகளான 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சட்டப்படி கிடைக்கக்கூடியது.

இதன் 2வது தபசில் சொத்து இறந்துபோன குருசாமி நாயக்கருக்கு சுயார்ஜித சொத்துக்கள் என்பதால், 1,4 வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதிக்கு தலா 1/7 பங்கும், இறந்துபோன சீனியம்மாளுக்குரிய 1/7 பங்கு மேற்படியாரின் வாரிசுகளான 2,3 வாதிகளுக்கும் கிடைக்கக்கூடியது. அதேபோல் 1,2 பிரதிவாதிகளுக்கு தலா 1/7

பங்கும், இறந்துபோன ராமசுப்புவிற்கு 1/7 பங்கும், மேற்படியாரின் வாரிசுகளான 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் சட்டப்படி கிடைக்கக்கூடியது.

நிலைமைகள் இவ்வாறு இருக்க, இதன் 2வது அயிட்டச் சொத்தின் தென்புறததில் மேல்புறம் 7ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது. தற்போது வாதிகள் பாக வழக்கு தாக்கல் செய்வதற்காக இதன் 1வது தபசில் 7வது அயிட்ட சொத்தை கடந்த 10.07.2017ல் பார்வையிட்டபோது, மேற்படி 7ம் பிரதிவாதி இதன 1வது தபசில் 7வது அயிட்ட சொத்தின் தென்கடைசியில் மேல்புறம் சுமார் 4 செண்டு இடத்தை அத்துமீறி ஆக்கிரமித்து வீடு கட்டிய விபரம் தெரியவந்தது. அது இதன் 3வது தபசிலாக காட்டப்பட்டுள்ளது. இதன் 3வது தபசில் சொத்தில் 7ம் பிரதிவாதிக்கு தனித்த உரிமையோ, பாத்தியமோ எதுவும் கிடையாது. இருந்தபோதிலும் பின் விவகாரங்களை தவிர்க்கும் பொருட்டு, வீண் வழக்குகள் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டும் 7ம் பிரதிவாதி இவ்வழக்கில் கட்சிகாரராக சேர்க்கப்பட்டுள்ளார்.

எனவே இதன் 1வது தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 3/28 பங்கையும், இதன் 2வது தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 3/7 பங்கையும் தனித்து நயம்மிதம் பார்த்து, பிரித்து, வாதிகளின் தனித்த சுவாதீனத்தில் ஒப்படைக்க ஏதுவாக ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்ககேட்டு, வாதிகளால் இவ்வழக்கு தாக்கல்.

**<u>3) 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :-</u>**

இந்த 1ம் பிரதிவாதி, வாதியின் தாவா உண்மையல்ல. வாதிகள் பிராதில் கூறியிருக்கும் சங்கதிகள் உண்மை. வாதிகள் கோரியிருக்கும் பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது.

பிராது 1வது தபசில் சொத்து வாதிகள் கூறுவபோல குருசாமி நாயக்கருக்கு பாத்தியம் என்பது உண்மை. குருசாமி நாயக்கரின் மனைவி சுந்தரம்மாள் 1998ம் வருடம் வாக்கில் இறந்துவிட்டார். குருசாமி நாயக்கர் 21.07.2000ல் இறந்துவிட்டார். மேற்படி குருசாமி நாயக்கருக்கு மூன்று பெண் மக்கள். மூன்று ஆண் மக்கள். இந்த 1ம் பிரதிவாதி வரதராஜ பெருமாள், குருசாமி நாயக்கரின் மகனாவார். 2ம் பிரதிவாதி சங்கரப்பன் மற்றொரு மகனாவார். குருசாமி நாயக்கரின் மற்றொரு மகனான

ராமசுப்பு 24.10.2014ல் இறந்துவிட்டார். இறந்துபோன ராமசுப்புவிற்கு 4 முதல் 6 பிரதிவாதிகள் வாரிசுகள் குருசாமி நாயக்கருக்கு 1,4 வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி மகள்கள் குருசாமி நாயக்கரின் மற்றொரு மகள் சீனியம்மாள் 29.08.2013ல் இறந்துவிட்டார். அவருக்கு இவ்வழக்கில் உள்ள 2,3 வாதிகள் வாரிசுகள்.

பிராது 1வது தபசில் சொத்து பூர்வீக சொத்தாக இருப்பதால் இந்த 1ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும், 2ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும், இறந்துபோன ராமசுப்புவின் வாரிசுகள் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் சேர்ந்து 8/28 பங்கும், 3ம் பிரதிவாதிக்கு 1/28 பங்கும், 1ம் வாதிக்கு 1/28 பங்கும், 4வது வாதிக்கு 1/28 பங்கும், குருசாமிநாயக்கரின் இறந்துபோன மகள் சீனியம்மாளின் வாரிசுகளான 2,3 வாதிகளுக்கும் சேர்த்து 1/28 பங்கும் சட்டப்படி கிடைக்கக்கூடியது.

பிராது 2ம் தபசில் சொத்து குருசாமி நாயக்கருக்கு சுயார்ஜித சொத்தாகும். அதில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தலா 1/7 பங்கும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் சேர்ந்து 1/7 பங்கும், 1,4 வாதிகளுக்கு தலா 1/7 பங்கும், 2,3 வாதிகளுக்கு சேர்ந்து 1/7 பங்கும் சட்டப்படி கிடைக்கக்கூடியது.

பிராது 3வது தபசில், 1வது தபசில் 7வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதியாகும். பிராது 3வது தபசில் சொத்தில் 7ம் பிரதிவாதி வாதிகள் பிராதில் கூறியிருப்பது போல ஆக்கிரமிப்பு செய்திருப்பது உண்மை. மேற்படி 3வது தபசிலில் 7ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையோ, பாத்தியதையோ கிடையாது. மேற்படி 3வது தபசில் ஆக்கிரமிப்பை 7ம் பிரதிவாதி சட்டப்படி அகற்ற கடமைப்பட்டவர்.

பிராது 1வது தபசில் சொத்தில் இந்த 1ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும், பிராது 2வது தபசில் சொத்தில் 1/7பங்கும் சட்டப்படி கிடைக்கக்கூடியது.

**4) 6ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 4ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்கரையின் சுருக்கம்:-**

வாதியின் தாவா உண்மையல்ல. வாதிகள் பிராதில் கூறியிருக்கும் சங்கதிகள் உண்மை. வாதிகள் கோரியிருக்கும் பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது.

பிராது 1வது தபசில் சொத்து வாதிகள் கூறுவபோல குருசாமி நாயக்கருக்கு பாத்தியம் என்பது உண்மை. குருசாமி நாயக்கரின் மனைவி சுந்தரம்மாள் 1998ம் வருடம் வாக்கில் இறந்துவிட்டார். குருசாமி நாயக்கர் 21.07.2000ல் இறந்துவிட்டார். மேற்படி குருசாமி நாயக்கருக்கு மூன்று பெண் மக்கள். மூன்று ஆண் மக்கள். இந்த 1ம் பிரதிவாதி வரதராஜ பெருமாள், குருசாமி நாயக்கரின் மகனாவார். 2ம் பிரதிவாதி சங்கரப்பன் மற்றொரு மகனாவார். குருசாமி நாயக்கரின் மற்றொரு மகனான ராமசுப்பு 24.10.2014ல் இறந்துவிட்டார். இறந்துபோன ராமசுப்புவிற்கு 4 முதல் 6 பிரதிவாதிகள் வாரிசுகள் குருசாமி நாயக்கருக்கு 1,4 வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி மகள்கள் குருசாமி நாயக்கரின் மற்றொரு மகள் சீனியம்மாள் 29.08.2013ல் இறந்துவிட்டார். அவருக்கு இவ்வழக்கில் உள்ள 2,3 வாதிகள் வாரிசுகள்.

பிராது 1வது தபசில் சொத்து பூர்வீக சொத்தாக இருப்பதால் இந்த 1ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும், 2ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும், இறந்துபோன ராமசுப்புவின் வாரிசுகள் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் சேர்ந்து 8/28 பங்கும், 3ம் பிரதிவாதிக்கு 1/28 பங்கும், 1ம் வாதிக்கு 1/28 பங்கும், 4வது வாதிக்கு 1/28 பங்கும், குருசாமிநாயக்கரின் இறந்துபோன மகள் சீனியம்மாளின் வாரிசுகளான 2,3 வாதிகளுக்கும் சேர்த்து 1/28 பங்கும் சட்டப்படி கிடைக்கக்கூடியது.

பிராது 2ம் தபசில் சொத்து குருசாமி நாயக்கருக்கு சுயார்ஜித சொத்தாகும். அதில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தலா 1/7 பங்கும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் சேர்ந்து 1/7 பங்கும், 1,4 வாதிகளுக்கு தலா 1/7 பங்கும், 2,3 வாதிகளுக்கு சேர்ந்து 1/7 பங்கும் சட்டப்படி கிடைக்கக்கூடியது.

பிராது 3வது தபசில், 1வது தபசில் 7வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதியாகும். பிராது 3வது தபசில் சொத்தில் 7ம் பிரதிவாதி வாதிகள் பிராதில் கூறியிருப்பது போல ஆக்கிரமிப்பு செய்திருப்பது உண்மை. மேற்படி 3வது தபசிலில் 7ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையோ, பாத்தியதையோ கிடையாது. மேற்படி 3வது தபசில் ஆக்கிரமிப்பை 7ம் பிரதிவாதி சட்டப்படி அகற்ற கடமைப்பட்டவர்.

பிராது 1வது தபசில் சொத்தில் இறந்துபோன ராமசுப்புவின் வாரிசுகளான அவருண்டய மனைவியான 4ம் பிரதிவாதி சௌந்திரகலா, மகளான 5ம் பிரதிவாதி சுந்தரி, மகனான இந்த 6ம் பிரதிவாதி குருசிங் ஆகியோர்களுக்கு சேர்ந்து 8/28 பங்கும், பிராது 2வது தபசில் சொத்தில் 1/7பங்கும் சட்டப்படி கிடைக்கக்கூடியது.

**5) இந்த வழக்கில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.**

*1. பிராது 1வது தபசில் சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும் பிராது 2ம் தபசில் சொத்தில் 1/7 பங்கும் 1ம் பிரதிவாதிக்கு கிடைக்க்கூடியதா?*

*2. பிராது தபசில் 1வது தபசில் சொத்தில் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சேர்ந்து 8/28 பங்கையும், 2ம் தபசில் சொத்தில் உள்ள 1/7 பங்கையும் பிரித்து இந்த 4 முதல் 6 பிரதிவாதிகளின் தனித்த சுவாதீனத்தில் ஒப்படைக்க உத்தரவிட்டு ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுள்ள பரிகாரம் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?*

*3. பிராது தபசில் 1வது அயிட்ட சொத்தில் 3/28 பங்கும், பிராது 2வது தபசில் சொத்துக்களில் தலா 3/7 பங்கும் பிரித்து தர கேட்டு முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?*

*4. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?*

***6)*** *இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் 4ம் வாதி வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.20 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.*

*7) வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது, இந்த வாதிகளும் பிராது தபசில் சொத்துக்களில் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இவ்வழக்கில் 1,4 மற்றும் 6 பிரதிவாதிகள் தவிர மற்ற பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்கள் ஆகிவிட்டார்கள் என்றும், 1,4 மற்றும் 6 பிரதிவாதிகள் பிராது தபசில் தபசில் சொத்துக்களில் தங்களுக்குரிய பாக உரிமையை கேட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்து பரிகாரத்திற்குரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார்கள் என்றும், பிராது 3ம் தபசில் சொத்தானது 1வது தபசில் 7வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதி என்றும், 3வது தபசில் சொத்தை 1வது அயிட்ட சொத்தில் ஒரு பகுதி என்றும், 3வது தபசில் சொத்தை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு அளிக்க வேண்டுமென்றும் வாதிட்டார். 1,4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தை ஒத்து வாதிட்டார்.*

*8) இருதரப்பு வாதங்களும் பரிசீலிக்கப்பட்டது.*

9) இதன் 1வது தபசில் சொத்துக்கள் ஆதியில் குருசாமி நாயக்கர் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். அதாவது இதன் 1 முதல் 3,5,9,14 அயிட்டச் சொத்துக்கள் குருசாமி நாயக்கரின் தகப்பனார் சங்கரப்ப நாயக்கருக்கு பூர்வீகமாகவும், 4, 6 முதல் 8, 10 முதல் 13 அயிட்டச் சொத்துக்கள் சங்கரப்ப நாயக்கருக்கு கிரையம் மூலமும் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். இதன் 2வது தபசில் சொத்துக்கள் மேற்படி குருசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சுயார்ஜித சொத்துக்களாகும். இதன் 1,2 தபசில் சொத்துக்களை மேற்படி குருசாமி நாயக்கர் அனுபவம் செய்து வந்து, கடந்த 21.07.2000ல் இறந்துவிட்டார். மேற்படியாரின் மனைவி சுந்தரம்மாள் குருசாமி நாயக்கருக்கு 1ம் பிரதிவாதி வரதராஜபெருமாள், 2ம் பிரதவாதி சங்கரப்பன், 4ம் பிரதிவாதியின் கணவரும் 5,6 பிரதிவாதிகளின் தகப்பனாருமான ராமசுப்பு என்ற மூன்று ஆண் மக்களும், 1,4 வாதிகள் மற்றும் 2ம் வாதியின் மனைவியும், 3ம் வாதியின் தாயாருமான சீனியம்மாள் 3ம் பிரதிவாதி சுப்பாலட்சுமி ஆகிய நான்கு பெண் மக்களும் வாரிசுகள். மேற்படி குருசாமி நாயக்கர் இறப்பிற்கு பின்பு, இதன் 1,2 தபசில் சொத்துக்களை மேற்படியாரின் ஆண், பெண் வாரிசுகள் கூட்டாக அடைந்து அனுபவம் செய்து வந்தார்கள்.

10) பிராது தபசில் சொத்துக்களில் தங்களுக்குரிய பங்கை பிரித்து தனித்த சுவாதீனத்திற்கு ஏதுவாக ஒரு முதல்நிலை தீர்ப்பு மற்றம் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டுமென்ற வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். 1,4 மற்றும் 6 பிரதிவாதிகள் பிராது தபசில் சொத்துக்களில் தங்களுக்குரிய பங்கை பிரித்து தனித்த சுவாதீனத்திற்கு ஒப்படைக்க ஏதுவாக ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டுமென்று பரிகாரம் கேட்டு பரிகாரத்திற்குரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார்கள்.

**11) எழுவினா-1க்கான தீர்வு :-**

பிராது 1ம் தபசில் சொத்தில் இந்த 1ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும் மற்றும் பிராது 2ம் தபசில் சொத்தில் 1/7 பங்கும் சட்டப்படி கிடைக்கக்கூடியதா?

மேற்படி எழுவினா குறித்து பரிசீலிக்கப்பட்டது. இந்த 1ம் பிரதிவாதி தரப்பில் வா.சா1ஆன மாரியம்மாளை குறுக்குவிசாரணை செய்யப்பட்ட போது, 1ம் தபசில் சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும், அதைப்போல் 2ம் தபசில் சொத்தில்

*1ம் பிரதிவாதிக்கு 1/7 பங்கும் கிடைக்கக்கூடியது என்று ஒத்துக்கொண்டுள்ளார். இந்த 1ம் பிரதிவாதி குருசாமி நாயக்கர் மற்றும் சுந்தரம்மாள் என்பவரின் மகன் ஆவார். இந்த 1ம் பிரதிவாதியும் பிராது தபசில் சொத்துக்களில் தனக்குரிய பங்கு உரிமை கேட்டு தனியாக நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார். அவ்வாறு உள்ள நிலையில் பிராது 1ம் தபசில் சொத்துக்களில் இந்த 1ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும் மற்றும் பிராது 2ம் தபசில் சொத்தில் 1/7 பங்கும் சட்டப்படி கிடைக்கக்கூடியது என்று இந்த எழுவினா -1ற்கு 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது*

***<u>11) எழுவினா-2க்கான தீர்வு :-</u>***

*பிராது தபசில் 1வது அயிட்ட சொத்தில் 8/28 பங்கும் மற்றும் பிராது 2வது தபசில் சொத்துக்களில் தலா 1/7 பங்கும் பிரித்து தர கேட்டு முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?*

*மேற்படி எழுவினா குறித்து பரிசீலிக்கப்பட்டது. இந்த 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா1ஆன மாரியம்மாளை குறுக்குவிசாரணை செய்யப்பட்ட போது, 1ம் தபசில் சொத்தில் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சேர்ந்து மொத்தத்தில் 8/28 பங்கும், அதைப்போல் 2ம் தபசில் சொத்தில் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சேர்ந்து மொத்தத்தில் 1/7 பங்கும் கிடைக்கக்கூடியது என்று ஒத்துக்கொண்டுள்ளார். இந்த 4ம் பிரதிவாதி குருசாமி நாயக்கரின் மகனான இறந்தபோன ராமசுப்புவின் மனைவி ஆவார். இந்த 5,6 பிரதிவாதிகள் இறந்துபோன ராமசுப்பு மற்றும் 4ம் பிரதிவாதியான சௌந்தரகலா என்பவரின் மகள் மற்றும் மகன் ஆவார்கள். இந்த 4 முதல் 6 பிரதிவாதிகள் பிராது தபசில் சொத்துக்களில் தங்களுக்கு பங்கு உரிமை கேட்டு தனியாக நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார்கள். அவ்வாறு உள்ள நிலையில் பிராது 1ம் தபசில் சொத்துக்களில் இந்த 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சேர்ந்து மொத்தத்தில் 8/28 பங்கும் மற்றும் பிராது 2ம் தபசில் சொத்தில் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சேர்ந்து 1/7 பங்கும் சட்டப்படி கிடைக்கக்கூடியது என்று இந்த எழுவினா-2ற்கு 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.*

***<u>12) எழுவினா 3க்கான தீர்வு :-</u>***

*இதன் 1வது தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 3/28 பங்கையும், 2வது தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 3/7 பங்கையும் நயமிதம் பார்த்து தனித்து பிரித்து*

*வாதிகளின் தனித்த சுவாதீனத்திற்கு ஒப்படைக்க ஏதுவாக ஒரு முதல்நிலைத் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?*

*மேற்படி எழுவினா குறித்து பரிசீலிக்கப்பட்டது. இதன் 1 முதல் 3, 5, 9, 14 அயிட்ட சொத்துக்கள் குருசாமி நாயக்கரின் தகப்பனார் சங்கரப்ப நாயக்கருக்கு பூர்வீகமாகவும், 4, 6 முதல் 8, 10 முதல் 13 அயிட்ட சொத்துக்கள் சங்கரப்ப நாயக்கருக்கு கிரையம் மூலமும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று வாதி சான்றாவணங்கள் 1 முதல் 6 ஆகிய கிரைய பத்திரங்கள் மூலமும் மற்றும் வாதி சான்றாவணம் 12 பட்டாக்கள் மூலமும் தெரியவருகிறது. இதன் 2வது தபசில் சொத்துக்கள் மேற்படி குருசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சுயார்ஜித சொத்துக்கள் என்று வா.சான்றாவணங்கள் 8 முதல் 12 மற்றும் 14, 15 மூலமும் தெரியவருகிறது.*

*இவ்வழக்கில் 4ம் வாதி மாரியம்மாள் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரை 1,4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட போது,*

> *"பிராது 1வது தபசில் சொத்து குருசாமி நாயக்கருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றும், 2வது தபசில் சொத்து குருசாமி நாயக்கருக்கு சுயசம்பாத்திய முறையில் பாத்தியப்பட்டது என்றும், 1வது தபசில் சொத்தில் 1வது பிரதிவாதிக்கு 8/28 பங்கும் இறந்து போன ராமசுப்புவின் வாரிசுகளான 4,5,6 பிரதிவாதிகளுக்கு சேர்த்து மொத்தத்தில் 8/28 பங்கும் கிடைக்கக்கூடியது என்றும், 3வது பிரதிவாதிக்கு 1/28 பங்கும், 1ம் வாதிக்கு 1/28 பங்கும் 4ம் வாதியான எனக்கு 1/28 பங்கும், இறந்துபோன சீனியம்மாளின் வாரிசுகளான 2,3 வாதிகளுக்கும் சேர்த்து 1/28 பங்கும் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான் என்றும், அதேபோல் 2ம் தபசில் சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தலா 1/7 பங்கும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சேர்த்து 1/7 பங்கும் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான் என்றும், 3வது தபசில் சொத்தில் 7வது பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரிதான் என்றும், ஆனால் 7ம் பிரதிவாதிக்கு சொத்தில் எந்தவித பங்கும் இல்லை என்றால் சரிதான் என்றும், மேற்படி ஆக்கரமிப்புகளை அகற்றுவதற்கு 7ம் பிரதிவாதி கடமைப்பட்டவர் என்றால் சரிதான் என்றும், இந்த 1,4,6 பிரதிவாதிகள் பிராது தபசில்*

*தங்களுக்குரிய பங்குகளை கிடைப்பதற்கு தனித்தனியாக நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான் என்றும், அவ்வாறு 1,4,6 பிரதிவாதிகள் அவர்களுக்குரிய பங்கை ஒதுக்கி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றால் சரிதான்"*

*என்றும் தனது குறுக்குவிசாரணையில் ஒத்துக்கொண்டுள்ளார். வாதி சாட்சி 1ன் சாட்சியத்தை பரிசீலிக்கும்போது இந்த 1,4,6 பிரதிவாதிகளுக்கு பிராது தபசில் சொத்துக்களில் அவர்களுக்குரிய பங்கை ஒதுக்கி தருவதற்கு வாதிகளுக்கு எந்த ஆட்சேபனை இல்லை என்று தெரியவருகிறது. மேலும் 1,4 மற்றும் 6 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து பிராது தபசில் சொத்துக்களில் தங்களுக்குரிய பாகத்தை பிரித்து தர வேண்டுமேன்று கேட்டு அதற்குரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார்கள். எனவே இதன் 1ம் தபசில் சொத்து வாதிகளுக்குரிய 3/28 பங்கும் 2வது தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 3/7 பங்கும் நயமீதம் பார்த்து தனித்து பிரித்து வாதிகளின் தனித்த சுவாதீனத்திற்கு ஒப்படைக்க ஏதுவாக ஒரு முதல்நிலை தீாப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டும் என்று வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்று எழுவினா 3-க்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.*

**13) எழுவினா 4கான தீர்வு :-**

*வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?*

*மேற்படி எழுவினா குறித்து பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கு பிராதில் 1வது தபசில் 7வது அயிட்ட சொத்தில் ஒரு பகுதி 3வது தபசிலாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி 3வது தபசில் சொத்தில் 7வது பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டிடம் காட்டியுள்ளதாக இந்த வாதிகளும் மற்றும் 1, 4 முதல் 6 பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள். 3ம் தபசில் சொத்தில் 7ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையோ பாத்தியதையோ கிடையாது என்றும், மேற்படி 3ம் தபசில் ஆக்கிரமிப்பை 7ம் பிரதிவாதி சட்டப்படி அகற்ற கடமைப்பட்டவர் என்றும் வாதிகளும், 1, மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகளும் கூறியுள்ளார்கள். இவ்வழக்கில் 7ம் பிரதிவாதி தோன்றா(*exparte*) தரப்பினர் ஆகியுள்ளார். பிராது 3ம் தபசில் சொத்தைப் பொறுத்து 7ம் பிரதிவாதிக்கும் 1 மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் எந்தவித பாகமும்*

கிடைக்கக்கூடியதல்ல என்பதால் 3ம் தபசில் சொத்தை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யப்படுகிறது. இதை தவிர வாதிகளுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல. இவ்வாறாக எழுவினா 4க்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்,** வழக்கு அனுமதிக்கப்பட்டு, இதன் 1ம் தபசில் சொத்தில் 1ம் வாதிக்கு 1/28 பங்கும், 2,3 வாதிகளுக்கு சேர்ந்து 1/28 பங்கும், 4ம் வாதிக்கு 1/28 பங்கும் மற்றும் 2ம் தபசில் சொத்துக்களில் 1ம் வாதிக்கு 1/7 பங்கும், 2,3 வாதிகளுக்கு சேர்ந்து 1/7 பங்கும், 4ம் வாதிக்கு 1/7 பங்கும் கிடைக்கக்கூடியது என்றும், 1ம் தபசில் சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும், 2ம் தபசில் சொத்தில் 1/7 பங்கும் கிடைக்கக்கூடியது என்றும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 1ம் தபசில் சொத்தில் சேர்ந்து 8/28 பங்கும், பிராது 2ம் தபசில் சொத்துக்களில் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சேர்ந்து 1/7 பங்கும் கிடைக்கக்கூடியது என்று முதல்நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்தும் 3ம் தபசில் சொத்தைப் பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யப்பட்டும் தீர்ப்பளிக்கப்படுகிறது. தரப்பினர்களின் உறவு முறையை கருத்தில் கொண்டு செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி விரிவாக்கம் செய்து, தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் நாள் (24.10.2018) திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-)ஏ.கே.பாபுலால்,
**சார்பு நீதிபதி,**
**கோவில்பட்டி.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள் :-</u>**

வா.சா.1 : ந. மாரியம்மாள் (4ம் வாதி)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 28.07.1945 | 1வது தபசில் 4,6 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.2 | 26.04.1938 | 1வது தபசில் 7வது அயிட்ட சொத்தைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.3 | 25.08.1942 | 1வது தபசில் 8வது அயிட்ட சொத்தைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.4 | 18.12.1939 | 1வது தபசில் 10வது அயிட்ட சொத்தைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 02.06.1943 | 1வது தபசில் 11,12வது அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.6 | 02.08.1928 | 1வது தபசில் 13வது அயிட்ட சொத்தைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.7 | 19.07.2017 | 1வது தபசில் 15வது அயிட்ட சொத்திற்குரிய நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா |
| வா.சா.ஆ.8 | 03.10.1980 | 2வது தபசில் 3வது அயிட்ட சொத்தைப் பொறுத்து குருசாமி நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.9 | 05.11.1981 | 2வது தபசில் 2வது அயிட்ட சொத்தைப் பொறுத்து குருசாமி நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.10 | 05.06.1986 | 2வது தபசில் 1வது அயிட்ட சொத்தைப் பொறுத்து குருசாமி நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.11 | 05.05.1980 | 2வது தபசில் 4வது அயிட்ட சொத்தைப் பொறுத்து குருசாமி நாயக்கர் பெற்ற கிரையப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.12 | 10.04.2015 | பிராது 1வது தபசில் 1 முதல் 12 அயிட்ட சொத்துகள் மற்றும் 2வது தபசில் 1,2 அயிட்ட சொத்துக்களுக்குரிய பட்டா (பட்டா எண்.346) |
| வா.சா.ஆ.13 | 10.04.2015 | பிராது 1வது தபசில் 13வது அயிட்ட சொத்துக்குரிய பட்டா (பட்டா எண்.341) |
| வா.சா.ஆ.14 | 10.04.2015 | பிராது 2வது தபசில் 3வது அயிட்ட சொத்துக்குரிய பட்டா (பட்டா எண்.1605) |
| வா.சா.ஆ.15 | 10.04.2015 | பிராது 2வது தபசில் 4வது அயிட்ட சொத்துக்குரிய பட்டா (பட்டா எண்.330) |
| வா.சா.ஆ.16 | 15.12.2014 | கோவில்பட்டி சார்பதிவாளர் வழங்கிய குருசாமி நாயக்கர் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.17 | 16.10.2018 | கோவில்பட்டி சார்பதிவாளர் வழங்கிய சீனியம்மாள் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.18 | 16.10.2018 | கோவில்பட்டி சார்பதிவாளர் வழங்கிய ராமசுப்பு இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.19 | 07.04.2000<br>02.12.2014 | பட்டா எண்கள் 341,346,1605 பட்டாக்களுக்கு குருசாமி நாயக்கர் பெயரில் உள்ள தீர்வை ரசீதுகள் 2 எண்ணம் |
| வா.சா.ஆ.20 | 23.03.2015 | குருசாமி நாயக்கரின் வாரிசு சான்றிதழ் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

இல்லை.

(ஒம்/-)ஏ.கே.பாபுலால்,
**சார்பு நீதிபதி,**
**கோவில்பட்டி.**

சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

*அசல் வழக்கு எண்.87/2017*

நேரிய தீர்ப்புரை,

*நாள் : 24.10.2018.*

**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**

முன்னிலை: **திரு. A.K. பாபுலால், B.Com.,L.L.M.,**
சார்பு நீதிபதி,

*2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் நாள் புதன்கிழமை*

*திருவள்ளுவராண்டு 2049 தமிழ் விளம்பி ஆண்டு ஐப்பசி திங்கள் 7ம் நாள் புதன்கிழமை*

***அ.வ.எண்.87/2017***

*1. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தாலுகா, மைப்பாறை கிராமம், வடக்குத் தெரு, கதவு எண்.3/24ல் வசிக்கும் லேட்.குருசாமி மனைவி, இந்து வயது 68 உள்ள ராமலட்சுமி*

*2. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, மந்தித்தோப்பு கிராமம், கணேஷ் நகர், கதவு எண்.6/744ல் வசிக்கும் குருசாமி குமாரர், இந்து வயது 65 உள்ள குருசாமி*

*3. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, மந்தித்தோப்பு கிராமம், கணேஷ் நகர், கதவு எண்.6/744ல் வசிக்கும் குருசாமி குமாரத்தி, இந்து வயது 20 உள்ள மகேஷ்வரி.*

*4. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி டவுண், வ.உ.சி.நகர் 6வது தெரு, கதவு எண்.5ல் வசிக்கும் நல்லசாமி மனைவி, இந்து வயது 59 உள்ள மாரியம்மாள்.*

... வாதிகள் ...

/எதிர் /

*1. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, சத்திரப்பட்டி கிராமத்தில் வசித்து வந்து, தற்சமயம் கோவில்பட்டி தாலுகா, இனாம்மணியாச்சி கிராமம், சீனிவாச நகர், கதவு எண்.399/6-V-ல் வசிக்கும் குருசாமி நாயக்கர் குமாரர், இந்து வயது சுமார் 65 உள்ள வரதராஜபெருமாள்*

*2. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, சத்திரப்பட்டி கிராமத்தில் வசித்து வந்து, தற்சமயம் கோவில்பட்டி தாலுகா, இனாம்மணியாச்சி கிராமம், சீனிவாச நகர், கதவு எண்.3/636-ல் வசிக்கும் குருசாமி நாயக்கர் குமாரர், இந்து வயது சுமார் 62 உள்ள சங்கரப்பன்*

*3. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, வில்லிசேரி கிராமம், கதவு எண்.4/61-ல் வசிக்கும் பிரகலாதன் மனைவி, இந்து வயது 48 உள்ள சுப்பாலட்சுமி*

*4. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, சத்திரப்பட்டி கிராமத்தில் வசித்து வந்து, தற்சமயம் கோவில்பட்டி தாலுகா, இனாம்மணியாச்சி கிராமம்,*

சீனிவாச நகர், கதவு எண்.3/637-ல் வசிக்கும் லேட்.ராமசுப்பு மனைவி இந்து வயது சுமார் 50 உள்ள சௌந்திரகலா

5. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, சத்திரப்பட்டி கிராமத்தில் வசித்து வந்து, தற்சமயம் கோவில்பட்டி தாலுகா, இனாம்மணியாச்சி கிராமம், சீனிவாச நகர், கதவு எண்.3/637-ல் வசிக்கும் லேட்.ராமசுப்பு குமாரத்தி, இந்து வயது சுமார் 27 உள்ள சுந்தரி

6. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, சத்திரப்பட்டி கிராமத்தில் வசித்து வந்து, தற்சமயம் கோவில்பட்டி தாலுகா, இனாம்மணியாச்சி கிராமம், சீனிவாச நகர், ககதவு எண்.3/637-ல் வசிக்கும் லேட்.ராமசுப்பு குமாரர், இந்து வயது சுமார் 25 உள்ள குருசிங்

7. தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, அகிலாண்டபுரம் என்ற பட்டியூர் கிராமத்தில் வசிக்கும் பொன் குமாரர், இந்து வயது சுமார் 65 உள்ள முத்து

... பிரதிவாதிகள் ...

வாதிகள், உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 7 விதி 1ன் கீழ், இதன் 1வது தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 3/28 பங்கையும், 2வது தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 3/7 பங்கையும் நயமிதம் பார்த்து தனித்து பிரித்து வாதிகளின் தனித்த சுவாதீனத்திற்கு ஒப்படைக்க ஏதுவாக ஒரு முதல்நிலைத் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கலான நாள் : 08.08.2017 மற்றும் 10.08.2017

வழக்கு மூலம் உற்பத்தியான நாள் : 21.07.2000, 29.08.2013, 24.10.2014, 15.06.2017, 30.06.2017, 10.07.2017, கோவில்பட்டி தாலுகா, இடைசெவல் பகுதி-I மற்றும் இடைசெவல் பகுதி-II கிராமங்களில் வைத்து உற்பத்தி.

வழக்குரையின் மதிப்பு : மொத்த மதிப்பு ரூ.7,26,000/-

1,2 தபசில் சொத்துகளின் மொத்த மதிப்பு ரூ.4,27,000/-, 1ம் தபசில் சொத்தின் மதிப்பு ரூ.3,76,500/- இதில் வாதிகளுக்குரிய 3/28 பங்கு மதிப்பு ரூ.40,340/-, 2ம் தபசில் சொத்தின் மதிப்பு ரூ.50,500/- இதில் வாதிகளுக்குரிய 3/7 பங்கு மதிப்பு ரூ.21,643/-

தமிழ்நாடு முத்திரைக் கட்டணச் சட்டப்பிரிவு 37(2)ன்படி நீதிமன்ற முத்திரைக் கட்டணமாக ரூ.5000/- செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.P.பாப்புராஜ், B.A.,B.L., திரு.P.சிவகுமார், B.A.,B.L., ஆகியோர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. கணேஷ் சுப்பிரமணியன், B.Sc.,L.L.B., அவர்கள் ஆஜராகியும், 4,6ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G. சரவணகுமார், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 2,3,5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜராகாத நிலையிலும், 2,3,5 பிர/திவாதிகள் ஒருதரப்பாக்கப்பட்டும், 7ம் பிரதிவாதி தரப்பில் திரு.சுந்தரபாண்டியன், M.L., அவர்கள் ஆஜராகியும், பின்னர் 7ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதரப்பாக்கப்பட்டும் மற்றும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்பாணை

1. இந்த வழக்கு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

2. இதன் 1ம் தபசில் சொத்தில் 1ம் வாதிக்கு 1/28 பங்கும், 2,3 வாதிகளுக்கு சேர்ந்து 1/28 பங்கும், 4ம் வாதிக்கு 1/28 பங்கும் மற்றும் 2ம் தபசில் சொத்துக்களில் 1ம் வாதிக்கு 1/7 பங்கும், 2,3 வாதிகளுக்கு சேர்ந்து 1/7 பங்கும், 4ம் வாதிக்கு 1/7 பங்கும் கிடைக்கக்கூடியது என்றும், 1ம் தபசில் சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு 8/28 பங்கும், 2ம் தபசில் சொத்தில் 1/7 பங்கும் கிடைக்கக்கூடியது என்றும், 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 1ம் தபசில் சொத்தில் சேர்ந்து 8/28 பங்கும், பிராது 2ம் தபசில் சொத்துக்களில் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு சேர்ந்து 1/7 பங்கும் கிடைக்கக்கூடியது என்று முதல்நிலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

3. 3ம் தபசில் சொத்தைப் பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

4. அக்கறையுள்ள தரப்பினர்கள் ஆணையர் நியமனம் செய்ய மனு தாக்கல் செய்து கொள்ளலாம்.

5. வழக்கு இறுதிநிலைத் தீர்ப்பாணைக்காக காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்படுகிறது.

6. தரப்பினர்களின் உறவு முறையை கருத்தில் கொண்டு செலவுத் தொகை இல்லை.

வாதிகள் தரப்பில் செலவுத் தொகையாக ரூ.8,555/- கணக்கிடப்பட்டுள்ளது.
பிரதிவாதிகள் தரப்பில் செலவு விபரப் பட்டியல் தாக்கல் இல்லை.

## செலவு விபரப் பட்டியல்

| | வாதி | பிரதிவாதிகள் |
|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. |
| 1. நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | 5000.00 | |
| 2. வக்காலத்து | 5.00 | ----- |
| 3. வழக்கறிஞர் ஊதியம் | 3,550.00 | |
| மொத்தம் ரூ. | 8,555.00 | ----- |

## தபசில் சொத்து விபரம் :-

பாளையங்கோட்டை ரி.டி. கோவில்பட்டி சப்ரி சரகம், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா. இடைசெவல் பகுதி-II கிராமத்தில் உள்ள புஞ்சை நிலங்கள்.

| வ.எண் | சர்வே எண் | விஸ்தீரணம் ஹெக். ஏர்ஸ் | மதிப்பு ரூ. பை |
|---|---|---|---|
| 1 | 13/8 | 0.22.50 | 11,600.00 |
| 2 | 671/1 | 0.11.00 | 5,700.00 |
| 3 | 816/3 | 0.76.00. | 39,200.00 |
| 4 | 24/2 | 1.41.50 | 55,500.00 |
| 5 | 25/3A2A | 0.01.00 | 600.00 |
| 6 | 25/3B | 0.60.50 | 31,300.00 |
| 7 | 25/2 | 2.23.00 | 1,15,000.00 |
| 8 | 671/2 | 0.21.00 | 10,800.00 |
| 9 | 671/3 | 0.51.00 | 26,300.00 |
| 10 | 753/1 | 0.01.00 | 600.00 |
| 11 | 753/2 | 0.01.50 | 1000.00 |
| 12 | 753/3 | 0.00.50 | 300.00 |

பாளையங்கோட்டை ரி.டி. கோவில்பட்டி சப்ரி சரகம், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, இடைசெவல் பகுதி-I கிராமத்தில் உள்ள புஞ்சை நிலங்கள்

| வ.எண் | சர்வே எண் | விஸ்தீரணம் ஹெக். ஏர்ஸ் | மதிப்பு ரூ. பை |
|---|---|---|---|
| 13 | 449 | 0.56.50 | 29,400.00 |
| 14 | 176/1 | 0.44.50 | 29,200.00 |

15) பாளையங்கோட்டை ரி.டி. கோவில்பட்டி சப்ரி சரகம், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா. இடைசெவல் பகுதி-II சத்திரப்பட்டி கிராமத்தில் நத்தம் சர்வே எண்.859/15ல் கிழமேல் வடதலை 17/6 மீட்டர், தென்தலை 21.6 மீட்டர்,

தென்வடல் மேல்தலை 12.6 மீட்டர், கீழ்தலை 11.6 மீட்டருக்கு 237.16 சதுர மீட்டரில் இடிந்த நிலையில் உள்ள காலிமனை மதிப்பி ரூ.20,000/-

1வது தபசில் சொத்தின் மொத்த மதிப்பு ரூ.3,76,500/-

1வது தபசில் வாதிகளுக்குரிய 3/28 பங்கு மதிப்பு ரூ. 40,340/-

**2வது தபசில்**

பாளையங்கோட்டை ரி.டி. கோவில்பட்டி சப்ரி சரகம், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா. இடைசெவல் பகுதி-II கிராமத்தில் உள்ள புஞ்சை நிலங்கள்.

| வ.எண் | சர்வே எண் | விஸ்தீரணம் ஹெக். ஏர்ஸ் | மதிப்பு ரூ. பை |
|---|---|---|---|
| 1 | 674/3 | 0.27.50 | 18,800.00 |
| 2 | 689 | 0.47.50 | 24,500.00 |
| 3 | 757/1 | 0.05.50. | 3,800.00 |
| 4 | 757/2 | 0.05.00 | 3,500.00 |

2வது தபசில் சொத்தின் மொத்த மதிப்பு ரூ.50,500/-

2வது தபசில் வாதிகளுக்குரிய 3/7 பங்கு மதிப்பு ரூ.21,643/-

**3வது தபசில்**

**(1வது தபசில் 7வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதி)**

பாளையங்கோட்டை ரி.டி. கோவில்பட்டி சப்ரி சரகம், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா. இடைசெவல் பகுதி-II கிராமத்தில் உள்ள புஞ்சை சர்வே எண்.25/2ல் 2.23.00 ஹெக்டேர் நிலத்தின் தென் பகுதியில் மேல் பக்கம் சுமார் கிழமேல் 21 அடி, தென்வடல் 65 அடியில் கட்டியிருக்கும் காரை மட்டப்பா வீடு மட்டும் மதிப்புரூ.3,00,000/-

(3வது தபசில் சொத்து, 7ம் பிரதிவாதியால் 1வது தபசில் 7வது அயிட்ட சொத்தில் ஒரு பகுதியில் அத்துமீறி ஆக்கிரமித்து கட்டப்பட்டது என்பதால், மேற்படி கட்டிடத்தில் வாதிகள் பாகம் கோரவில்லை, அதனால் ஷை 3ம் தபசில் சொத்து மதிப்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை)

2018ம் வருடம் அக்டோபர் திங்கள் 24ம் நாளான இன்று என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/-)ஏ.கே.பாபுலால்,
**சார்பு நீதிபதி,**
**கோவில்பட்டி.**

*சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.*
*அசல் வழக்கு எண்.87/2017*
*தீர்ப்பாணை*
*நாள் : 24.10.2018.*